யாழ்ப்பாணம்.

Registered as a News paper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 7-2-1985 வியாழக்கிழமை (தை 25-ஜ அவ்16) முழக்கம் 3

1,50,000 ரூபா பொருட்கள் போயின

காரைநகர் சீநோரில் 13 மாதத்தில் 7ஆவது கொள்ளை

(காரைநகர்)

காரைநகர் சீநோர் நிறுவனத்திலிருந்து நேற்று முன்தினமிரவு சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் இயந்திரங்களும், மோட்டார்களும் மற்றும் பல எலக்ரோனிக் பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சுமார் 35000 ரூபா பெறுமதியான இரண்டு இயந்திரங்களும் இதில் அடங்கும். ஆயுதமுனையில் இப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது கடந்த பதின்மூன்று மாதங்களில் இங்கு நடத்தப்பட்ட ஏழாவது கொள்ளை இதுவாகும்.

—4ஆம் பக்கம் பார்க்க

★ பேராசிரியர் ரூல்ப் புல்ட்ஜன்ஸ் எச்சரிக்கை:

இந்தியாவின் நட்பை பெறுவதற்கு இலங்கையை நட்டாற்றில் கைவிடவும் அமெரிக்கா தயங்காது!

இந்தியாவின் அன்பையும் ஆதரவையும் சம்பாதிக்க அமெரிக்கா இயன்ற மட்டும் நயமாக முயன்று பார்க்கிறது. இந்தியாவின் நட்பைச் சம்பாதிப்பதற்காக இலங்கையை நட்டாற்றில் விடவும் அமெரிக்கா தயங்கமாட்டாது இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான திறவுகோல் புதுடில்லியிலும், சென்னையிலும் தான் இருக்கிறது

இந்திராகாந்தி குடும்பத்துடன் இருபது ஆண்டுகளுக்கு மேலாக நெருங்கிப் பழகிவரும் பேராசிரியர் ரூல்ப்புல்ட்ஜன்ஸ் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் இப்போதைய பிரச்சினை பற்றி கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு பேராசிரியர் புல்ட்ஜன்ஸ் அளித்த பேட்டி ஒன்றில் தற்போதைய நிலைமையை இலங்கை மிகக் கவனமாகக் கையாள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளதுடன் புதுடில்லியில் உளவாளிகள் கையாடிய பத்திரங்கள் உண்மையானவையாக இருக்கு

—4ம் பக்கம் பார்க்க

ஹெலிகப்டரைச் சுட்டு வீழ்த்தும் முயற்சி தோல்வியில் முடிந்தது!

வானிலும் தரையிலும் தேடுதல் வேட்டை நகர் முழுவதும் பலத்த கண்காணிப்பு!

(யாழ்ப்பாணம்)

குருநகர் முகாமுக்கு வந்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஹெலிகப்டர் மீது நேற்றுக் காலை பத்து மணியளவில் இனம்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டு வேட்டை தோல்வியில் முடிந்ததாகவும், இதனால் ஹெலிகப்டருக்கோ, அதில் பயணம் செய்தவர்களுக்கோ எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

குருநகரில் தற்போது முகாம் அமைந்திருக்கும் இடத்திற்கும் பழையகுருநகர் முகாம் அமைந்திருந்த இடத்திற்குமிடையே இம் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன,

ஒரு குழுவினர் ஒளித்திருந்து தாககுதலமேற்கொண்டதாகத் தெரிய வந்த இடத்திலிருந்து பற்றரி, வயர்கள் உட்பட பல பொருட்களைச் சம்பந்தப்பட்டவர்கள் மீட்டதாகவும் அறிய வந்துள்ளது. ஹெலிகப்டர் தாக்குதல் முயற்சியைத் தொடர்ந்து யாழ் நகர் பகுதி முழுவதும் பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் தரையிலும், ஆகாயத்திலும் மேற்கொள்ளப்பட்டன பல மணி நேரமாக ஹெலிகப்டரும், விமானமும் வட்டமிட்டுப் பறந்ததால் யாழ்ப்பாணப் பகுதியில் பதற்றம் அதிகரித்தது. கடைகள், அலுவலகங்கள் அனைத்தும் மூடப்பட்டு எங்கும் வெறிச்சோடிக் கிடக்கக் காணப்பட்டது.

நேற்றிரவுச் சம்பவம்

நேற்றிரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது கந்தர்மடம் அரசடி வீதியால் சைக்கிளில் சென்றவர்கள் வாகனச் சத்தத்தைக்கேட்டு சைக்கிள்களைப் போட்டுவிட்டு ஓடினர் வாகனங்கள் சைக்கிள்களுக்கு மேலால் சென்றன.

ஐந்து சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில்! துப்பாக்கிச் சூட்டினால் இருவர் படுகாயம்

நேற்றுக்காலை 10-30 மணியிலிருந்து இரவு வரை நகரின் பல பாகங்களிலிருந்தும் அடுத்தடுத்து துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன

இவ்வேளையில் யாழ்ப்பாணம ஆஸ்பத்திரிக்கு ஐவரின் சடலங்கள் கொண்டுவரப்பட்டன. இவர்களில் பலருக்கும் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பீலிக்ஸ் அந்தோனிப்பிள்ளை (26), குருநகரைச் சேர்ந்த டானியல் இம்மானுவல் (48), பண்டத்தரிப்பைச் சேர்ந்த பத்மரூபன் (20), கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பொ. பூபாலசிங்கம் (57) மானிப்பாயைச் சேர்ந்த பி ரி இராஜதுரை (23) ஆகிய ஐவரது சடலங்களுமே நேற்று யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன.

துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்த கரவெட்டியைச் சேர்ந்த கணபதிசிங்காரம் (56) கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்லையா குகதாசன் ([illegible]0) ஆகிய இருவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சட்டத்தரணிகள் இரு வாரம் நீதிமன்றம் செல்வதில்லை என முடிவு

அடுத்த இரண்டு வாரங்களுக்குத் தொடர்ந்தும் நீதிமன்றங்களுக்குச் செல்வதில்லையென்றும், அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென்று மீண்டும் இருபதாம் திகதிகூடி தீர்மானிப்பதெனவும் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக சங்கச் செயலாளர் சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா தெரிவித்தார்.

கடந்த பல நாட்களாக நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றாதிருக்கும் சட்டத்தரணிகளின் சங்கக் கூட்டம் அதன் தலைவர் எஸ். ஆர் கனகநாயகம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அடுத்த இருவாரங்களுக்கு நீதிமன்றங்களுக்குச் செல்லக்

—4ம் பக்கம் பார்க்க

நாளை முதல் ஆரம்பம்

தினசரி யாழ்தேவி ரயில் வவுனியா வரைக்கும்!

தற்போது அனுராதபுரம் வரை நடத்தப்படும் ரயில் சேவை நாளை வெள்ளிக்கிழமை முதல் வவுனியா வரை நடத்தப்படும். நேற்று தேசிய பாதுகாப்புக் கவுன்சில் எடுத்தமுடிவினையடுத்து வவுனியா வரை ரயில் சேவையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

இம்முடிவுக்கமைய தினசரி கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே யாழ்தேவி ரயில் சேவை நடாத்தப்படும். காலை 7-05மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் யாழ்தேவி நண்பகல் 12-05க்கு வவுனியா வந்தடையும்.

மீண்டும் மாலை 3-15க்கு வவுனியாவிலிருந்து புறப்படும் யாழ்தேவி இரவு 8-40க்கு கொழும்பு கோட்டையைச் சென்றடையும்.

ஜனவரி மாதம் 19ம் திகதி முறிகண்டியில் யாழ்தேவி ரயில் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளானதையடுத்து, யாழ்ப்பாண ரயில் சேவை அனுராதபுரம் வரை நடத்தப்பட்டு வந்தது.

ரயில் பிரயாணிகள் வசதிக்காக

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு பஸ் சேவை

வவுனியாவிலிருந்து புறப்படும் யாழ்தேவியில் பயணம் செய்பவர்களின் வசதிக்காக யாழ்ப்பாணத்தில் இருந்தும். பருத்தித்துறையிலிருந்தும் பஸ் சேவைகளை நடத்த வட பிரதேச போக்குவரத்துச் சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது

தினசரி காலை 6 மணிக்கும்

— 4-ம் பக்கம் பார்க்க

கந்தவனக் கோவில் சப்பரத்தின் ஒருபகுதி எரிந்தது !

50 வீடுகள், பல படகுகள் தீக்கிரை

நகைகள் கொள்ளை

பூசகரும் தாக்கப்பட்டார்!

(வல்வெட்டித்துறை)

பொலிகண்டியில் கடந்த 30, 31ம் திகதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது கல்வீடுகள் உட்பட சுமார் ஐம்பது வீடுகள் தீக்கிரையானதாகவும், கடற்கரையின் வடக்கு, தெற்குப் பகுதிகளில் நடைபெற்ற இச் சம்பவங்களின்போது பல இடங்களில் லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் வல்வெட்டித்துறைப் பிரஜைகள் குழு சேகரித்த தகவல்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

பொலிகண்டி கந்தவனக் கோயில் சப்பரத்தின் ஒரு

— 4ம் பக்கம் பார்க்க

தெல்லிப்பளை வயாவிளான் வீதி முற்றாகத் தடை

(பலாலி)

வயாவிளான் சந்தியில் தெல்லிப்பளை நோக்கிச் செல்லும் பிரதான பாதை

— 4ம் பக்கம் பார்க்க

ஆலாலசுந்தரம் பேச்சு:

பிரச்சினைகள் தீர வாழ்க்கை முறையிலும் பெரும் மாற்றங்கள் ஏற்படல் வேண்டும்

(இருபாலை)

நாடு இன்றிருக்கின்ற சூழ்நிலையில் நாம் எதிர்நோக்கும் கஷ்டங்கள் பல அவற்றிற்கெல்லாம் வெறும் அரசியல் தீர்வுமட்டும் ஒரு முடிவைக் கொண்டுவராது நாம் அன்றாட வாழ்க்கையிலும் நடைமுறையிலும் சில மாற்றங்களை கொண்டுவந்தால்தான் நிச்சயமாக அந்த நிலையை எதிர்பார்க்க முடியும், என்று தமிழர் விடுதலைக் கூட்டணி நிர்வாகச் செயலாளர் மு. ஆலாலசுந்தரம், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்

இன்று நாடு இருக்கும் சூழ்நிலையில் நாம் இம் மாதிரியான பணிகளை மேற்கொள்வது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. இருப்பினும் இக்கட்டான நிலையிலும் கூட இந்நிகழ்ச்சியை சிறப்பாக செய்திருப்பதுபாராட்டக் கூடியது. ஒரு காலத்தில் சனசமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே கல்வியறிவை வளர்ப்பதற்கும் குறிப்பாக வயோதிபரிடத்தில் கல்வியறிவில்லாமல் இருப்பதை ஈடுசெய்வதற்கும் உலக அறிவியலை நெருக்கிக்கொள்வதற்கும் சமூகத்தில் ஒரு பிணைப்பை ஏற்படுத்துமாகவே இருந்தது என்றும் அவர் சொன்னார்.

இதன் காரணமாகத்தான் சனசமூக நிலையங்கள் வெறும் வாசிகசாலையாக மட்டும் இல்லாமல் வேறு பணிகளிலும் அவைகள் ஈடுபடுத்தப்பட வேண்டும் எமது மக்களுக்கு நாம் செய்யவேண்டிய பல கடமைகள் இருக்கின்றன அத்தகைய கடமைகளை இந்நிலையங்கள் மூலமாகத்தான் பொறுப்பேற்க வேண்டும் எனவும் திரு ஆலாலசுந்தரம் குறிப்பிட்டார்.

திருவாளர்கள் இராஜரத்தினம், சபாரத்தினம், இராஜகுலேந்திரன் ஆகியோரும் பேசினார்கள் பொதுச் செயலாளர் எஸ். குசமூர்த்தி நன்றியுரை நிகழ்த்தினர்.

ஜிங்கின்ஸ் நிர்வாகிகள்

(மன்னார்)

எருக்கலம்பிட்டி ஜிங்கின்ஸ் பொது நல மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு

தலைவர் ஜனாப் கே. அர்ஹரூ, உப தலைவர் ஜனாப் எச் ஹஸ்புதீன், செயலாளர் ஜனாப். எச். சதுறுதீன். உப செயலாளர் ஜனாப். எம். எஸ் மஸ்கூர், பொருளாளர் ஜனாப். ஏ. றம்சீன்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக ஜனாப். எம். எஸ் தஸ்லீம், ஜனாப் எச் எம். மன்சூர், ஜனாப. எச் எம் சலீம், ஜனாப் எம் எஸ். சல்மான, ஜனாப். என் மசூர், ஜனாப் எஸ். ஜஹான் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்,

இளைப்பாறினார்

(நல்லூர்)

யாழ் பரி. யோவான் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் ஆங்கில ஆசிரியையாக இருபத்தைந்து வருடங்கள் சேவையாற்றிய திருமதி வரராஜசிங்கம் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

வரிவிளம்பரம்

தவறி விட்டது

இரட்ணசபாபதி சிறீதரனின் அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுப்பவர் தயவு செய்து மேற்படி விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். இ. சிறீதரன் 5/2, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.

விற்கவும் வாங்கவும்

சகலவித பொருட்களும் விற்கவும் – வாங்கவும் தினமும் வாருங்கள்.

ஏலவிற்பனை நிலையம்
கோப்பாய்

தவறிவிட்டது

காரைநகர் சிவன்கோவில் வீதி திருமதி பா. ஐயாத்துரையின் அடையாள அட்டை கண்டி வீதியில் சாவகச்சேரிக்கும் கைதடிக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

58ம இலக்க முத்திரைககு உணவுப் பொருட்கள் இல்லை

(குருநகர்)

சமீபத்தில் கரையேரப் பகுதி மீனவர்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட்ட உணவு முத்திரையின் ஜனவரி மாதத்திற்குரிய ஐம்பத்தெட்டாம் இலக்க முத்திரைககு உணவுப் பொருட்கள் கொடுப்பனவு இல்லையாம்.

உணவு முத்திரைகள் கைக்குக் கிடைத்ததும் மகிழ்ந்தவர்களுக்கு அந்த மகிழ்ச்சியை மட்டுப்படுத்தியதாக இச் செய்கை அமைந்து விட்டது.

ஜனவரி மாதத்திற்குரிய முத்திரைகளைப் பெற்றுக்கொண்ட கடைக்காரர்கள் கூட்டுறவுச் சங்கத்தால் உணவுப் பொருட்கள் அதற்கு வழங்கப்படாமையால் முத்திரைகள் செல்லுபடியாகாதென திரும்பப்பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இம்மாதம் 7-ம திகதி வியாழக்கிழமை வழங்கப்பட இருக்கும் உணவுப் பொருட்கள் ஐம்பத்தொன்பதாம் இலக்க முத்திரைக்கே வழங்கப்படுமெனத் தெரிய வருகிறது. மீனவர்களுக்கு வழங்கப்பட்ட ஆறு மாதங்களுக்கும் உரிய ஒருதொகுதி முத்திரைகளில் ஐம்பத்தெட்டாம் இலக்க முத்திரை செல்லுபடி அற்றதாகி விட்டது குறிப்பிடத்தக்கது.

மயிலிட்டி மீனவர்களுக்கு புத்தூர் மக்களின் உதவி

அண்மையில் அச்சுவேலி–ஆவரங்காலில் இடம் பெற்ற அசம்பாவிதத்தால் வீடுகளை விட்டு வெளியேறி புத்தூர் கிழக்கு புத்தகலட்டி பாடசாலை, புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையம், சிறுப்பிட்டி மேற்கு பாடசாலை ஆகியவற்றில் தஞ்சமடைந்த மக்களின் பராமரிப்புக்கு புத்தூர் மேற்கு கலைமதி சனசமூக நிலையம் கோப்பாய் தொகுதியின் பல கிராமங்களில் நிதி சேகரித்தது.

பொது மக்கள் வழங்கிய தாராள நிதி, உணவுப் பொருள் உதவிகள் நூறுக்கும் அதிகமான தஞ்சமடைந்த மக்களுக்கு வழங்கப்பட்டது. அந்நிதியில் எஞ்சிய பகுதியை மேற்படி சனசமூக நிலையம் மயிலிட்டியில் தொழில் இன்றி கஷ்ட நிலையில் உள்ள நூறு மீனவர் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களாக வழங்கியது.

நிதி உணவுப் பொருட்களுக்கான தமது வேண்டுகோளை ஏற்று தாராள உதவி செய்த சகல மக்களுக்கும் கலைமதி சனசமூக நிலயம் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

தபாலகம் மூடப்பட்டதால் மக்கள் அவதி

(மானிப்பாய்)

அண்மையில் இடம் பெற்ற கொள்ளைச்சம்பவத்தையடுத்து மானிப்பாய் தபாலகம் மூடப்பட்டதால் இப்பகுதி மக்கள் பெரும் இன்னலடைகின்றனர். காசுக் கட்டளைகளையும்மாற்ற முடியாமலும் அவசரத்திற்கு தந்தியனுப்ப அவஸ்தைபபடுவதுடன், வெளிநாட்டுக் கடிதங்ளுக்கு அவற்றிற்குரிய பெறுமதிக்கு முத்திரை கிடைக்காததால் குறைந்த பெறுமதியுடைய பல முத்திரைகளை வாங்கி கடித உறை முழுவதும் ஒட்டுகின்றனர்.

சுகாதார வசதியின்மை

(குருநகர்)

குருநகர் சுய வீடமைப்புத் திட்டப் பகுதியில் வாழ்பவர்கள் மழை காலங்களில் நீர்ச் சிரங்கு, நுளம்புத் தொலலைகளால் சுகாதாரச் சீர்கேடுகளுக்கு உள்ளாகி வருகின்றனர். வடிகால் அமைப்புகள் இல்லாமையால் மழைநீர் வீதிகளிலும் குடியிருப்புக் காணிகளிலும் நிரம்பித் தேங்கி நிற்கின்றன

புதிதாக அரச காணிகளில் அத்துமீறிக் குடிசைகள் போட்டுக்கொண்டு வாழ்பவர்களுக்கு பலசல கூடங்கள் இன்மையால் மலசலமும் மழை நீருடன் தேங்கிக் கிடந்து தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

சைக்கிள் திருடன் பிடிபட்டான்

பல நாட்களாக சைக்கிள் திருடி வந்தவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்ட சம்பவம் நேற்று முன்தினம் சின்னக்கடை சந்தையில் நடைபெற்றது இங்கு அடிக்கடி சைக்கிள் திருடபபடுவதை அறிநத பிரமுகாகள் சிலர் சைககிள் ஒன்றை பூட்டாமல்வைத்துக் கண்காணித்துக் கொண்டிருநத போது இந்நபர் அச்சைக்கிளை நைஸாக எடுத்துச் செல்லும் போது பிடிக்கபபட்டார்.

ஜனசக்தி நிலைய நிர்வாகிகள்

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பின்வருவோர் உத்திபோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள் தலைவர்:- க. அரசரெட்ணம், உபதலைவர்;- மா. சிவசுப்பிரமணியம், செயலாளர்.- ந ஜீவரெட்ணம், உபசெயலாளர்;- க விமலேஸ்வரன், பொருளாளர்:-சி. மகாதேவன், விளையாட்டுச் செயலாளர்;- க. இரவீந்திரன், கலைச் செயலாளர்;- ரீ சண்முகதாஸ், நிலையப் பொறுப்பாளி:- பி சுப்பிரமணியம், நூலகப் பொறுப்பாளி:- தெ ஜெயந்தன், உபநூலகப பொறுப்பாளி:- திருமதி தி. சரஸ்வதி.

பிறந்தநாள் வாழ்த்து

❋ காரைநகர் சேசகமூர்த்தி யோகாம்பிகை தம்பதிகளின் மகள் ஜெயந்திமாலா இன்று தனதுஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

❋ யாழ்-பாரதி வீதி. இரத்தினசபாபதி அருந்ததி தம்பதிகளின் மகள் லங்கினி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ கொழும்புத்துறை சிவராசா ஜெயலட்சுமி தம்பதிகளின் மகன் சிவநேசன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ திருநெல்வேலி தெற்கு நகுணதலசிங்கம் புஷ்பராணி தம்பதிகளின் மகள் கமலவேணி இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

பாடசாலைகளின் 'தரம்' இப்போது ஆண்டாக மாற்றம்

(அச்சுவேலி)

இதுவரை காலமும் பாடசாலைக் கல்வியில் பாலர் வகுப்பு தொடக்கம் 12ம் வகுப்பு (தரம்) வரை என இருந்த வகுப்பு அமைப்பின் பெயர் இந்த வருடம் தொடக்கம் முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு என பதின்மூன்று ஆண்டு கொண்டதாக இருக்கும்.

''தரம்'' என்பதற்கு பதிலாக ''ஆண்டு'' என்பது கட்டாயமாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தவேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் திரு ஈ. எல். விஜயமானே பிராந்திய கல்விப் பணிப்பாளர்கட்கு ஊடாக சகல பாடசாலை அதிபர்களிற்கும் விசேட சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தி உள்ளார்.

'தரம்'' என்பதற்கு பதி ''ஆண்டு'' என பாடசாலைத் தரங்களை, புதிய பெயரிட்டு அழைப்பதால் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் உண்டாகும் குழப்பங்களை தவிர்க்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே எல்லாக் கடிதப் போக்குவரத்திலும் பதிவேடுகளிலும் 1985ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ''ஆண்டு'' என பெயரிட்டு வழங்குவதை பின்பற்றுக என மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் நிலைய இடமாற்றங்கள்

(சரசாலை)

வவுனியா தபால் நிலையத்தில் உதவித் தபால் அதிபராக கடமையாற்றிய க. இங்கராசா பளை தபால் நிலையத்திற்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார் சாவகச்சேரி தபால் நிலையத்தில் பதில் தபால் அதிபராக கடமையாற்றிய ஆ. பாலசுந்தரம் அநுராதபுர தபால் நிலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புத்தளம் உதவித் தபால் அதிபராக கடமையாற்றிய வே சிவப்பிரகாசம் இரத்தினபுரி தபால் நிலையத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

நெருக்கடியான நேரத்தில் அதிபர்கள் கடமை பெரிது

(சுழிபுரம்)

கடந்த வெள்ளிக்கிழமை பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரியில் வட்டுக்கோட்டை வட்டார அதிபர் சங்கம்பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தியது ஓய்வு பெறும் நான்கு பாடசாலை அதிபர்களுக்காக இது நடாத்தப்பட்டது. திருவாளர்கள் கந்தையா, தம்பையா, சிவலிங்கம், திருமதி ஐயாத்துரை ஆகியோரே மேற்படி ஓய்வு பெற்ற அதிபர்களாவா.

பிரதம விருந்தினராக திரு. ப. சண்முகராஜா அவர்களும் விசேட விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி திரு இ சுந்தரலிங்கமும் கலந்து கொண்டனர்.

இவ்வுபசார விழாவில் திரு. கே. அருணாசலம் (விக்ரோறியாக் கல்லூரி அதிபர்) பேசுகையில்;' பிரச்சினைகள் தோன்றும் போது விடாமுயற்சியுடனும் இளம் மாணவ சமூகத்தைப் பாதிக்காதவகையிலும் நடந்து மாணவ சமூகத்திற்கு நல்வழி காட்டிகளாக நடந்து கொள்ளுதல் அதிபர்களின் முக்கிய கடனாகும்'' என்றார்.

பிரதம கல்வியதிகாரி திரு. சுந்தரலிங்கம்தமது உரையில், நெருக்கடியான காலகட்டங்களில் அதிபர்கள் செவ்வனே நடந்து சமூகத்தைக்காக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கின்றது' என்றார். மேலும் இவ்வுபசார விழாக்களின் அவசியம் பற்றியும் விளக்கினார். இறுதியாக கல்லூரி உப அதிபர் திரு பொன்னம்பலம் நன்றியுரை கூறினார்.

புனித லூர்து அன்னை விழா

(புலோலி)

தும்பளை புனித லூர்த்து அன்னையின் வருடாந்த திருவிழா இம்முறை மிக அமைதியாகவே நடைபெறுமென பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. பொனிபொஸ் அடிகளார் அறிவித்துள்ளார்

கடந்த 2ம் திகதி புனித லூர்தது அன்னையின் வருடாந்ததிருவிழாஆரம்பமானது தினமும் நவநாட்பலிப் பூசைகள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும். 11ம் திகதி காலை 7-30 மணி பூசைப்பலியுடன் திருவிழா நிறைவுபெறும் திருவிழா நாட்களில் ஆலயத்தில் யாத்திரீகர்கள் தங்கவும் வியாபாரிகள் வியாபாரம் செய்யவும் அனுமதியளிக்கப்படமாட்டாதென பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

இளைஞர்களின் முன்மாதிரி

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குள் உள்ள டேவிற் வீதியில 15 க்கு மேற்பட்ட மின் குமிழ்கள் எரியாத நிலையில் இருப்பதை யாழ் மாநகர சபையிடம் பல தடவைகள் எடுத்துக் கூறியும் இதனை மாற்றம் செய்யாததையிட்டு கவலையடைந்த டேவிற் வீதி, இளைஞர்கள் பொது மக்களின அன்பளிப்புடன் இம் மின் குமிழ்களை மாற்றி இருள் மயமாக இருந்த இவ் வீதியை ஒளிமயமாக்கியுள்ளனர் மேலும வீதியில் குப்பை போடுவதை தடுக்க பல குப்பைத் தகரங்களை குப்பை சேகரிப்பதற்காக வைத்துள்ளனர்.

உதய சிந்தனை

நாம் ஒன்றுபட்டு வாழவேண்டும். அன்றேல் ஒன்றாகச் சாகவேண்டியதுதான்.

பென்சமின் பிராங்லின்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

இதய ஒலி

7-2-85 வியாழக்கிழமை (இரத்தாக்ஷி தை 25)

இடமாற்றம் வேண்டாம் மனமாற்றமே தேவை

அரசாங்க சேவையில் ஒரு பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு மேல் சேவைபுரிந்த ஊழியர்கள் வருடாந்த இடமாற்றத்திற்குட்படுத்தப்படுவது வழக்கம்.

சில சந்தர்ப்பங்களில், வருட இடைநடுவில் தண்டனை இடமாற்றங்களும் நடைபெறுவதுண்டு.

அரசியல்பழிவாங்கல் இடமாற்றங்களும் அவ்வப்போது நடைபெற்று வருவது சகஜம்.

இவைகளைத் தவிர வேறொரு 'புதுவகையான' இடமாற்றமும் இப்போது அரசாங்க சேவையில் அறிமுகப்படுத்தப்படுகின்றதோ என்ற சந்தேகம் பத்திரிகைச் செய்திகளைப் படிக்கும்போது ஏற்படுகிறது.

வருடாந்த, தண்டனை, பழிவாங்கல் இடமாற்றங்களைத் தவிர எந்த வேளையிலும் அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய 'இனரீதி'யான இடமாற்றத் திட்டமொன்றும் உருவாக்கப்பட்டு வருகிறதா என்பதே எம் முன்னால் தோன்றும் கேள்வியாகும்.

1983 ஜூலை கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் இன்னமும் இடமாற்றம் கிடைக்கவில்லை. பாதிக்கப்பட்ட சிலர் இன்னமும் பழைய இடங்களிலேயே பணியாற்றி வருகின்றனர்.

மேலும் சில ஆசிரியர்கள் இக் காரணத்தினால் ஓய்வு பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

ஜூலை கலவரத்தால் இன்னலுக்குள்ளான சுமார் நூற்றைம்பது வரையிலான அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் மீண்டும் வேலைக்குச் செல்லவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்ற அவர்கள் இடமாற்றம் கேட்டனர். அதுவும் வழங்கப்படவில்லை அதற்குப் பதிலாக, அவர்களை விசேஷ திட்டமொன்றின் கீழ் 'பென்ஷன்காரர்'' ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சில முக்கியமான அரச அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ் அதிகாரிகளுக்கு இப்போது இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம் புகையிரத நிலைய ரயில் கட்டுப்பாட்டுப்பிரிவிலுள்ள மூன்று சிரேஷ்ட தமிழ் அதிகாரிகள் அங்கிருந்து இடமாற்றப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள இருபது தமிழ் பொலிஸ் அதிகாரிகளுக்கு தென்னிலங்கைக்கு இடமாற்றம் வந்துள்ளது.

இடமாற்ற உத்தரவு பெற்றுள்ள பொலிஸ்நிலைய, புகையிரத நிலைய அதிகாரிகள் அனைவருமே இருபத்தைந்து வருட சேவையை முடித்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் ஓய்வு பெறும் வயதை நெருங்குபவர்கள்.

இடமாற்றத்தை ஏற்றுக்கொள்ளாது இவர்கள் அனைவரும் ஓய்வு பெறக் கூடுமெனவும் தெரியவந்துள்ளது. அப்படியானால், தமிழ் அதிகாரிகள் பலரையும் முக்கியமான இலாகாக்களிலிருந்து ஓய்வு பெறச் செய்வதற்கென்றே இத்திட்டம் தயாரிக்கப்படுகின்றதோ என்று ஐயுறவு கொள்ளவும் வேண்டியிருக்கிறது.

விமான நிலையங்கள், துறைமுகங்களின் முக்கியமான பிரிவுகளில் கடமையாற்றும் தமிழ் சுங்க அதிகாரிகளும் அங்கிருந்து மாற்றப்படலாமெனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தமிழ்ப்பகுதிகளுக்கு சிங்கள மக்களை இடமாற்றுவதற்கு அரசு பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றது.

இவையெல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்க்கும் போது வடஇலங்கையை, ஒரு குட்டித் தென்னிலங்கையாக மாற்றவே முயற்சி எடுக்கப்படுவதுபோல எமக்குத் தோன்றுகிறது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வா, இராணுவத் தீர்வா என்ற கேள்வியின் முன்னால் விடைகாண முடியாது ஆட்சியாளர்களும் மக்களும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது போதாதென்று 'இடமாற்றங்கள்' மூலம் இதனைச் செய்யலாமென்று யாரோ ஒரு புத்திசாலி கண்டுபிடித்திருக்கிறார் போலும்!

இனப்பிரச்சினையை இடமாற்றத்தினால் தீர்த்துவிட முடியாது. இந்த மனமாற்றமே தேவை என்று கூறிவைக்க விரும்புகிறோம்.

அமைச்சரவை: மூத்த தலைவருடன்

எம்.ஜி.ஆர். தீவிரமான ஆலோசனை

புதுவையில் இ. காங்கிரஸுடன் உடன்பாடு

(சென்னை)

தேர்தலில் மகோன்னத வெற்றியீட்டிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மந்திரி சபையை அமைப்பதில் மேலும் தாமதம் நேர்வதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் தமிழகம் மீண்டுள்ள முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தனது மூத்த அமைச்சர்களுடன் தீவிர ஆலோசனைகள் நடத்தி புதிய மந்திரிசபைக்கான பல்வேறு ஆயத்தங்களையும் செய்து வருகிறார் என்று நேற்று அவரது இல்லம் அமைந்துள்ள ராமவரம் தோட்டத்திலிருந்து வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன. இன்று முதல்வர் ஆளுநரை சந்திப்பார் என நம்பப்படுகிறது.

திரு இராமச்சந்திரன் தமிழகம் மீண்ட இரு நாட்களில் மாநிலத்தின் பல விடயங்கள் குறித்தும் அறிந்துகொள்வதில் மிகுந்த கரிசனை காட்டி வருகிறாராம்.

நேற்றுக்காலை, தேர்தலில் வெற்றியீட்டிய கழகச்சட்டமன்ற உறுப்பினர்களையும், லோகசபை உறுப்பினர்களையும் முதலமைச்சர் சந்தித்தார்.

கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளராகப் பணியாற்றியவரும் ராஜ்யசபை உறுப்பினருமான செல்வி ஜெயலலிதா தொடர்பாக முதல்வர் எடுக்கவுள்ள முடிவு அரசியல் வட்டாரங்களில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. கழகத்தின் ராஜ்ய சபைத் துணைத்தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஜெயலலிதா; 'எம். ஜி ஆர். இங்கு கைதி நிலையில் வைத்திருக்கப்படுவார், அவரை நான் சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும்,' என்று அறிக்கை மூலம் தெரிவித்ததும் கழகக்கட்டுப்பாட்டை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் ஜெயலலிதாவை சூசகமாகக் குறிப்பிட்டு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கன.

இது இவ்வாறு இருக்க, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் இந்திராகாங்கிரஸ்-அ.தி.மு.க உடன்பாடு உருவாகியுள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

9 மாதம் சிறை வைக்கப்பட்ட

பிரிட்டன் பிரஜை நால்வர் லிபியாவிலிருந்து விடுதலை

(லண்டன்)

லிபியாவில் கடந்த ஒன்பது மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பிரித்தானியரையும் விடுதலை செய்து அவர்கள் நாட்டுக்கே திருப்பி அனுப்புவது என்று லிபிய ஜனாதிபதி கேணல் கடாபி தீர்மானித்துள்ளார்.

இத்தீர்மானத்தைத் தான் வரவேற்பதாகப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கிரெட் தட்ச்சர் நேற்றுத் தெரிவித்தார்.

கேணல் கடாபியின் இத்தீர்மானத்துக்கு லிபிய மக்கள் காங்கிரஸும் அங்கீகாரமளித்தது.

பிரிட்டனில் உள்ள லிபியத் தூதரகத்தில் அசம்பாவித சம்பவம் ஒன்று நிகழ்ந்தபோது பிரிட்டனின் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்குதலானதும் அதன்பின் இரு நாடுகளுக்கும் இடையே ராஜ்ய உறவுகள் முறிவுற்றதும் குறிப்பிடத்தக்கவை. விடுதலையானோர் நேற்றுப் பிரிட்டனிடம் ஒப்படைக்கப்படவிருந்தனர்.

வருட நடுவில் உறவு மீண்டும் துளிர்க்கும்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவும், சீனாவும் நேரடி வர்த்தக உறவுகளை இவ்வருட நடுப்பகுதியில் உருவாக்கிக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது. பல வருடங்களாக இவ்வுறவு நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யா-ஈரான் விருப்பம்

(தெஹ்ரான்)

சோவியத் யூனியனும், ஈரானும் வர்த்தகப் பொருளாதார உறவுகளை உருவாக்கிக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.

காலனித்துவப் பிரதேசம் பற்றி

பிரிட்டனும் ஸ்பெயினும் ஜெனீவாவில் சந்தித்தன

(ஜெனீவா)

பிரிட்டனால் கடந்த இருநூற்றெண்பது ஆண்டுகளாக காலனித்துவப் பிரதேசமாக இருந்துவரும் சிம்பிருத் தொடர்பாக பிரிட்டிஷ் ஸ்பெயின் வெளிநாட்டமைச்சர்கள் ஜெனீவாவில் நேற்று இருதரப்புப் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்தனர்.

ஸ்பெயின் இப்பிரதேசத்தை தன்னிடம் திருப்பித்தருமாறு பிரிட்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தவகையில் கிம்பிருத்தின் தடைகள் யாவும் நீக்கப்பட்ட பாதைகள் சுதந்திரமாகத் திறந்து விடப்பட்டுள்ளன.

ரஷ்ய கப்பல் நிர்மூலம்?

(லண்டன்)

கம்பூச்சியப் பிரச்சினை தொடர்பான தாக்குதலின் போது நான்கு சோவியத் யூனியன் யுத்தக் கப்பல்கள் நாசம் செய்யப்பட்டன எனக் கூறப்படுகிறது. வியட்னாமியப் படைகள் துரிதமாக முன்னேறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெளியுறவு மந்திரிகள் சந்திப்பு

(லண்டன்)

ஏழு தெற்காசிய நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் ஒன்று கூடி பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

பாரத உளவு விவகார எதிரொலி

போலந்து கி. ஜெர்மனியின் அதிகாரிகள் நாடு கடத்தல்

(புதுடில்லி)

இந்தியாவிலிருந்து உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கிழக்கு ஜெர்மனி, போலந்து அதிகாரிகளை இந்தியா நாடுகடத்தியுள்ளது.

இவர்களுக்கு தான் இரகசியத் தகவல் கொடுத்ததை பிரதான சந்தேக நபரான நாராயண் ஒப்புக் கொண்டுள்ளதையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக நேற்றுப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து மேற்படி இரு நாடுகளினதும் தூதரகங்களும் இதுவரை எக்கருத்தையும் தெரிவிக்கவில்லை. உளவு நடவடிக்கைச் சம்பவம் தொடர்பாக இதுவரை இருபது பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் அறுவர் பிரதமரின் அலுவலகத்தில் பணிபுரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீன விமானம் இறக்குமதி

(பீக்கிங்)

சீனா ஜம்போ ஜெட் விமானங்களை இறக்குமதி செய்யவுள்ளதாக சீன விமானப் போக்குவரத்து நிறுவனம் நேற்றுத் தெரிவித்தது.

நியூஸிலாந்து: ராஜீவ் வாழ்த்து

(புதுடில்லி)

நியூஸிலாந்தின் தேசிய தினத்தையொட்டி அந்நாட்டின் பிரதம மந்திரி திரு. டேவிட் ரஸல் லாங்கேக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு வரும் வருடங்களில் வளர்ந்து வலுப்பெறும் என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

7. 2. 1985 வியாழக்கிழமை

ஈழமுரசு

மூதூர் கூட்டுறவுச் சங்க பணம் 44,449 ரூபா பகற் கொள்ளை!

(திருமலை)

மூதூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து திருமலை வங்கிக்கு நேற்றுக் காலை எடுத்துச் செல்லப்பட்ட முழுப்பணமும் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது. மூன்று இளைஞர்களினால் துணிச்சலாக மேற்கொள்ளப்பட்ட இக் கொள்ளை பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. சங்கத்திலிருந்து வங்கிக்கு எடுத்துச் செல்லப்பட்ட நாற்பத்து நாலாயிரத்து நானூற்றி நாற்பத்தொன்பது ரூபா பணமும், சுமார் முப்பத்தையாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன.

நேற்றுக்காலை நடைபெற்றது:

மட்டுநகரில் 3 கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளை; கல்முனை சந்தியில் பலர் கைது

(மட்டுநகர்)

மட்டுநகர் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று நடைபெற்ற பல கொள்ளைகள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் கல்முனை பஸ் நிலையத்தில் நேற்று அதிகாலை நின்ற அத்தனைபேரும் சுற்றிவளைக்கப்பட்டு வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஆரைப்பற்றை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருபத்தோராயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இங்குள்ள கூட்டுறவுக் கிளைகளின் பணம் சேகரிக்கப்பட்ட பின்னர் இக்கொள்ளை காலை 9–30 மணியளவில் நடைபெற்றது.

வந்தாறுமூலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திலும் சுமார் பத்தாயிரம் ரூபா இனம் தெரியாதவர்களால் நேற்று முற்பகல் கொள்ளையடிக்கப்பட்டது.

ஏருவூ சிகரட் விற்பனைக் கிளை நிலையத்திலும் பணம் கொள்ளையடிக்கப்பட்டதாயினும் மொத்தத் தொகை தெரிவிக்கப்படவில்லை.

கல்முனை பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்கு நின்ற தொழிலாளிகள் உட்பட சுமார் எண்பதுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனராம்.

தெல்லிப்பளை...

—1ம் பக்கத் தொடர்

பாதுகாப்புப் படையினரால் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கொங்கிறீட் தூண்கள் பலவற்றை நடு வீதியில் நாட்டி வீதியைத் தடைசெய்துள்ளனர்.

இந்தியாவின்...

—1ம் பக்கத் தொடர்

மென்றால் அது இலங்கைக்குப் பாரதூரமான ஆபத்தான ஒரு நிலைமையைச் சுட்டிக்காட்டுவதாக இருக்குமெனவும் எச்சரித்துள்ளார். அதற்கு முதல் இது பற்றி 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகையில் வெளியான தகவல்கள் உண்மையானவைதானா என்பதை இலங்கை அதிகாரிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு மும்முனை அணுகுமுறை உசிதமானது எனவும் பேராசிரியர் ஆலோசனை தெரிவித்துள்ளார். ராணுவ நடவடிக்கை, தமிழ்த் தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு சிங்கள மக்கள் மத்தியில் உரையாடல் நடத்தி அவர்களது ஒருமைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுதல், தமிழர்களுக்குநிர்வாக நடவடிக்கை மூலம்நிவாரணம் வழங்கி அவர்களை அரசின் பக்கத்துக்கு வென்றெடுத்தல் ஆகியவையே அவர் குறிப்பிட்ட மூன்று வழி முறைகளாகும்.

இரண்டாவது தொழிலதிபரும் கைதானார்

இந்தியாவில் உளவு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களில் தலைவரெனக் கருதப்படும் தொழிலதிபர் குமார் நாராயணனின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொண்டு பம்பாயில் மற்றுமொரு தொழிலதிபர் நேற்று கைதானார். உளவு நடவடிக்கையில் சம்பந்தப்பட்ட யோகேஷ். பி. மாணிலால் என்ற இத் தொழிலதிபர் இம்மாதம் 16ம் திகதி வரை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தீர்வு உள்நாட்டிலும், சர்வதேச அரங்குகளிலும் பாரதூரமான நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும். சர்வதேச உதவியின் மீதுதான் இலங்கை தங்கியிருக்கிறது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தீவிரவாதிகளைக் கொலை செய்வதால் பயங்கரவாதத்தைக் கொலை செய்துவிட முடியாது, இந்த அணுகுமுறை ஒரு போதும் வெற்றியளிக்காது அரசியல், சமூகவியல், மனோதத்துவவியல் எனப்படும் பல்வேறு வழிகளில் அவர்களின் காரணங்களைக் கண்டறிந்து அவற்றை அகற்ற முயலவேண்டுமென்றும் பேராசிரியர் ருல்ப் புல்ஜெனஸ்குறிப்பிட்டுத் தெரிவித்தார்.

நான்கு சட்ட சபைகள் தேர்தல்

ராமராவ் உட்பட நான்கு முதல்வர்கள் மனுத்தாக்கல்

அடுத்த மாதம் தேர்தல் நடைபெறவுள்ள மாநில சட்டப் பேரவைகள் நான்கிற்கு நேற்றுடன் வேட்பு மனுத்தாக்கல் முடிவடைந்தது. பீகார், மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகிய இந்தச் சட்டப் பேரவைகளுக்கு ஆயிரத்திற்கும் அதிகமான வேட்பாளர்கள் மனுத்தாக்கல் செய்தனர். ஏனைய ஏழு மாநிலங்களுக்கும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரிக்கும் மனுத்தாக்கல் நாளையுடன் முடிவடையும்.

நேற்று ஆந்திர முதலமைச்சர் என். டி ராமராவ், பீகார் முதலமைச்சர் சந்திரசேகர்சிங், மகாராஷ்டிர முதலமைச்சர் வசந்தராவ் பாட்டீல், ஒரிசா முதலமைச்சர் ஜே. பி. பட்நாயக் ஆகியோர் தங்கள் மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

கடைசியாகக் கிடைத்த செய்திப்படி 11 மாநிலங்களுக்கும் பாண்டிச்சேரிக்கும் இது வரை மனுத்தாக்கல் செய்துள்ளோர் மொத்தம் பதினையாயிரம் பேராவர்.

காரைநகர்..

—1ஆம் பக்கத் தொடர்

இதனால் நேற்றைய கொள்ளையும் சேர்த்து சுமார் ஒன்பது லட்சம் ரூபா பெறுமதியான படகுகளும், இயந்திரங்களும், மற்றும் பொருட்களும் இங்கிருந்து அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

அடுத்தடுத்து இவ்வாறு நடைபெறும் கொள்ளைகளால் தாங்கள் தொழிலிழக்கவி நேக்கும் பரிதாப நிலைமையைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக இங்குள்ள ஊழியர்கள் இன்று உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

முக்கிய கூட்டம்

இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களின் பாதிப்புக்கள் பற்றி ஆராய்வதற்காக தமிழ்மொழி வழித் தொழிற் சங்கங்களின் கூட்டமொன்று இவ்வார இறுதிக்குள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது

சட்டத்தரணிகள்...

—1ம் பக்கத் தொடர்

கூடாது என்ற பிரேரணையை சட்டத்தரணி சு. நடராஜா பிரேரித்ததாகவும் இதற்கு ஆதரவாக இருபது பேர் வாக்களித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது மொத்தம் நாற்பத்தெட்டு சட்டத்தரணிகள் நேற்றைய கூட்டத்தில் பங்கு பற்றினர் சங்கக் கூட்டம் மீண்டும் 20ம் திகதி நடைபெறவுள்ளது.

50 வீடுகள் ..

— 1-ம் பக்கத் தொடர்

பகுதியும் எரிக்கப்பட்டதுடன் கோயில் பூசகரும் தாக்கப்பட்டதாக இவர்களிடமுள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விடயங்களை மேற்படி பிரஜைகள் குழு இன்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைச் சந்தித்துச் சமர்ப்பிக்கவுள்ளது இச் சம்பவங்களினால் அச்சமுற்று புகலிடம் நாடி ஓடிய சுமார் இரண்டாயிரம் பேர் தமது பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்லத் துணிவின்றி இருப்பதாகவும். இச் சம்பவங்களின்போது ஆறுபடகுகளும், வலைகளும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி பிரஜைகள் குழுவின் பிரதிநிதி ஒருவர் 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

பாண்டிச்சேரியில்:

காங்கிரஸ்: 20
அ. தி. மு. க.: 10

பாண்டிச்சேரி சட்ட சபைக்கான தேர்தலில் இந்திரா காங்கிரசும் அ. தி. மு. க. வும் இட ஒதுக்கீட்டில் தீர்மானத்துக்கு வந்துள்ளன. இதன்படி இந்திரா காங்கிரஸ் இருபது இடங்களிலும், அ. தி. மு. க. பத்து இடங்களிலும் போட்டியிடும் இத்தகவலை அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ப. உ. சண்முகம் நேற்றுச் சென்னையில் வெளியிட்டார். பாண்டிச்சேரி சட்டசபையின் மொத்த இடங்கள் முப்பதாகும்.

யாழ்ப்பாணத்தி...

—1ஆம் பக்கத் தொடர்

8 மணிக்குமிடையே அரை மணி நேர இடைவெளியில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு நடத்தப்படும் பஸ் சேவை, அவசியமேற்படின் அதிகரிக்கப்படும் என்று சபைத் தலைவர் ஒரு கனகரத்தினம் நேற்றிரவு 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

பருத்தித்துறையிலிருந்தும் கொடிகாமத்துக்கூடாக வவுனியா வரை பஸ் சேவை நடத்தப்படும்.

இங்கிருந்து செல்லும் பஸ்கள், யாழ்தேவி ரயிலில் வருபவர்களை யாழ்ப்பாணம் கொண்டுவரவும் ஒழுங்கு செய்யப்படும்.

உரியவர்களின் கவனத்திற்கு!

அண்மையில் யாழ்நகரில் கொள்ளையினாலும் வான், ஜீப் கடத்தலாலும் பெரும் பாதிப்பை எதிர் நோக்கி இருக்கும் ஏ. பவர் அன் கோ லிமிட்டெட் (A Baur & Co. Ltd.) ஊழியர்களின் உருக்கமான வேண்டுகோள.

தமிழ் மக்களின் பாரம்பரியமான விவசாயத்திற்கு அரும்பெரும் சேவையாற்றி, விவசாயப் பெருங்குடி மக்களின் சிறந்த சேவையால் நன்மதிப்பைப் பெற்றுள்ள எமது நிறுவனத்தில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களையும், வான், ஜீப் முதலியவற்றையும் திருப்பிக் கொடுக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இலாப நோக்கமற்ற சேவையையே நோக்கமாகக் கொண்ட சுவிற்சலாந்து தேசத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுதும் அவர்களாலேயே நிர்வகிக்கப்படும் இந்த ஸ்தாபனம், வடமாகாண மக்கள் விவசாயத்தில் எதிர் நோக்கும் கஷ்டங்களை உணர்ந்து, யாழ்ப்பாணத்தில் ஒரு கிளையை ஆரம்பித்து, அவர்கள் உணவுற்பத்தியில் தன்னிறைவு பெறவேண்டுமென்று சேவை செய்துகொண்டிருக்கும் அதே வேளையில், இதன்மூலம் கிடைக்கும் சிறு லாபம் கூட தர்ம ஸ்தாபனங்களுக்கே நன்கொடையாக வழங்கப்படுகின்றது.

இத்தகைய ஒரு ஸ்தாபனத்தைச் செயலிழக்கச் செய்வது நியாயமானதா என்பதனைத் தயவுசெய்து சிந்தியுங்கள்!

நெருக்கடியான இக்காலகட்டத்திலும் வாகனங்கள் ஓடாத நிலையிலும்கூட வாடகைக்கு வாகனங்களை அமர்த்தி உரத்தை வடமாகாண மக்களுக்கு விநியோகித்தோம் இதனை விவசாயத்தை மேற்கொள்ளும் மக்கள் நன்கு அறிவார்கள்.

இந்த நடவடிக்கையால் விவசாயிகளும் இந்நிறுவனத்தின் ஊழியர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள் எனவே கடத்தியவர்கள் யாராக இருந்தாலும் உடனே மனிதாபிமானத்தோடும் நிறுவனத்தின் நல்நோக்கத்தைக் கருத்திற்கொண்டு விவசாயிகளின் எதிர்காலத்தைச் சிந்தித்தும், பொருட்களையும் வாகனங்களையும் திருப்பித் தந்துதவுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம். விவசாயத்தை மேற்கொள்ளும் அனைவரையும் இவ்விஷயத்தில் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஊழியர்கள்
ஏ. பவர் அன் கம்பனி

மரண அறிவித்தல்

பொன்னுத்துரை பூபாலசிங்கம்

பொன்னுத்துரை பூபாலசிங்கம் அகால மரணமானார். இவர் பொன்னுத்துரை, செல்லம்மாவின் மகனும், மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், உதயகுமார் (சுவிற்சலாந்து) வைஜந்தி, ராஜ்குமார் (யாழ்தபாலகம்) ஜெயந்தி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகராஜா, நாகேஸ்வரி, கோபாலகிருஷ்ணன், தனபாலசிங்கம், தனலஷ்மிதேவி பாலச்சந்திரனின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற இராசலிங்கம் (பண்டியன்தாழ்வு.) விஜயலக்சுமி, கனகாம்பிகையின் சகலனும் தாமோதரம்பிள்ளையின் பெருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை மாலை 3 00 மணிக்கு கொய்யாத்தோட்டம் 14/2 புது வீதியில் அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

14/2 புது வீதி
கொய்யாத்தோட்டம்

மனைவி. மக்கள்
சகோதரர்கள்

ஈழமுரசு சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 7-2-85 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.